S. M. FERNANDO
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★
5/0, Hospital Road, Near Bank of Ceylon Jaffna

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ். எம். பெர்ணாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

சுடர்: 6 பிரமோதூத ஹு மார்கழி ஸ் 23 உ. திங்கட்கிழமை (07-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 42

# யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க

# ஐ.நா.உதவியை நாடுக!

## சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீலங்கா அரசுக்கு யோசனை

லண்டன், ஜனவரி 7

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்தத்தை பாரபட்சமற்ற முறையில் கூட்டாகக் கண்காணிப்பதற்கும் —

மனிதாபிமான உத்தரவாதத்தை அனுசரிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் சேவைகளைப் பெற்றுக் கொள்வது குறித்து பரிசீலனை செய்யுங்கள்!

— இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீலங்கா அரசுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறது.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த மனித உரிமை ஸ்தாபனம், இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை அறிக்கை ஒன்றை விடுத்தது. அந்த அறிக்கையிலேயே இந்த யோசனை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவில் செயற்படுவதற்கு ஐ.நா.வும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும் பெற்றுள்ள செயற்படும் ஆணையை (Operational Mandate) விரிவுபடுத்துவதன் மூலம் அவர்களின் சேவைகளை இந்த இரு விஷயங்களுக்கும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## ஜி. சீ. ஈ. பரீட்சைகள் ஏப்ரலில்?

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான விசேட ஜி.சி.ஈ. சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடத்துவது என்று பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்திருக்கிறதாம்.

கொழும்புப் பத்திரிகைகள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ-எ)

## கிழக்கில் பரவலாக யுத்த நிறுத்த மீறல்கள்

### கட்டடங்கள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

கிழக்கில் பரவலாக பல இடங்களில் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி - பாலையடி வெட்டை என்ற இடத்தில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. குழு வரும்!

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிய புகார்களை விசாரிப்பதற்காக மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக் குழுவின் உயர்மட்ட விசாரணைக் குழு ஒன்று இந்த ஆண்டு நடுப்பகுதியில் இலங்கை வரும் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ]

## சர்வதேச அமைப்புகள் தீர்வுகாண வலியுறுத்து

கொழும்பு, ஜன. 7

தமிழ் மக்களுக்கு சுயாட்சி முறையை வழங்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணச் சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உரிய தீர்வைக் காணுங்கள்.

— இவ்வாறு மனித உரிமை அமைப்புக்கள் உட்பட எட்டு முக்கிய சர்வதேச அமைப்புக்கள் ஸ்ரீலங்கா அரசைக் கோரியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ]

## ரெலோ செல்வம் கைது

தமிழகத்தில் ஈழப் போராளிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் [ரெலோவின்] தலைவரான செல்வமும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தமிழகத்தில் கைதானோரில் பெரும்பாலானோர் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## பாதுகாப்பு மாநாட்டில் முடிவு

யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கும் பொறுப்பை செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கலாம் என்று கடந்த வெள்ளியன்று மாலை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற பாதுகாப்பு உயர்மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## தமிழ்க் கைதிகள் மாற்றம்

கிழக்கு மாகாணத்தில் படையினரின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக கடந்த 4ஆம் திகதி அக்கரைப்பற்றில் தடுத்து வைக்கப்பட்ட 38 பேர் வெலிக்கடைக்குக் கொண்டுவரப்பட்டனர். [உ]

# அரசு பேச்சு நடத்த முன்வராவிடில் யுத்த நிறுத்தத்தை தொடர இயலாது!

## புலிகள் பிரமுகர் கிட்டு கூறுகிறார்

கொழும்பு, ஜன. 7

"ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்த முன்வராத பட்சத்தில் தற்போதைய போர் நிறுத்தத்தைத் தொடர முடியாத நிலை ஏற்படும்"

இப்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லண்டன் அலுவலகப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] கூறியதாக கொழும்புப் பத்திரிகை ஒன்றை மேற்கோள் காட்டி இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

போர் நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால் அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பு அவசியம்.

காலவரையறையற்ற யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கிறோம் என்பதற்காக அரசு பேச்சுவார்த்தைக்கு வராமல் சும்மா இருக்க முடியாது.

-இவ்வாறு திரு. கிட்டு மேலும் தெரிவித்தார்.

அரசு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் விடுதலைப் புலிகள் தமது போரை மீண்டும் ஆரம்பிப்பார்கள் என்ற எச்சரிக்கையை திரு. கிட்டு இந்தப் பேட்டி மூலம் மறைமுகமாக விடுத்திருப்பதாக வெளித்தான் வானொலி அறிவித்தது. [உ-எ]

## பொம்மர்களை கைவிட்டு தரையிலும் சண்டையிட விமானப்படை தயாராம்

கொழும்பு, ஜன. 7

வன்னிகுடாவில யுத்தம் வெடித்து அதனால் பெரும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டால் — விமானப் படைச் சிப்பாய்கள் தமது விமானங்களைத் தரையில் நிறுத்தி, தமது வான் நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு இராணுவப் படையுடன் இணைந்து தரையில் போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருக்கிறார்கள்.

விமானப்படைத் தளபதி டெரன்ஸ் குணவர்த்தனா கொழும்பு வாரஇதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

வளைகுடாவில் போர் மூண்டு எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டால், முடிந்தவரை எமது நடவடிக்கைகளை மேற்கொள்வோம். எரிபொருள் முடியும்வரை எமது போர்விமானங்கள் பறக்கும். நிலைமை மோசமானால்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மிதிவெடியில் சிக்கியவர் யாழ். வாசி

யாழ்ப்பாணம், ஜன. 7

கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் காலை இழந்தவர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியியலாளர் எனத் தெரியவந்துள்ளது.

இவர் கந்தர்மடம், ஆனந்தசாமி வீதியைச் சேர்ந்த ஒரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியக் கடற்படை 70 படகுகளை பிடித்தது!

இலங்கைத் தமிழர் பாவிப்பதாகக் கருதப்படும் சுமார் 70 படகுகளை இந்திய கடற்படையினர் கடந்த வாரம் பிடித்து தமது பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி இந்து நாளிதழில் இச்செய்தி வெளியாகியிருக்கிறது.

ஈழத் தமிழரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவே கடற்படையினர் இந்த நடவடிக்கையை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## முச்சந்தி முரளி



பொம்மர் இல்லை என்... ...வாட்டம் அதோகதிதான்...!

## கோப்பாயில் திரளான மக்கள் கப்டன் அமலனுக்கு அஞ்சலி

கோப்பாய், ஜன. 7

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலுக்குப் பின்னர், கடந்த வெள்ளிக்கிழமை ஆனையிறவு இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரமரணம் அடைந்த கப்டன் அமலனுக்கு நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கப்டன் அமலனின் புகழுடம்பு மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது.

தென்மராட்சி, வடமராட்சி, தீவுப் பகுதி மற்றும் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் நேற்று கோப்பாயை வந்தடைந்து, தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர்.

சிற்சில பகுதிகளில் இருந்து மக்கள் சைக்கிள்களில் ஊர்வலமாக வந்திருந்தனர்.

ஸ்ரீலங்கா அரசின் யுத்த நிறுத்த மீறலை கண்டிக்கும் எழுச்சி ஊர்வலமாக இவை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நாம் அறிவித்த யுத்த நிறுத்தத்தை நேர்மையுடன் கடைப்பிடிக்கிறோம்

### புலிகள் பிரமுகர் ராஜன்

யாழ்ப்பாணம், ஜன. 7

"சமாதான வழியில் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் சந்தர்ப்பம் அளிக்கின்ற வேளைகளில் எல்லாம் ஸ்ரீலங்கா அரசு அநியாயக் கொலைகளைப் புரிந்து வந்துள்ளது. அது போன்ற ஒரு சம்பவம்தான் ஆனையிறவிலும் நடந்துள்ளது.

எமது நிலை குறித்து யாரும் குழப்பமடையத் தேவையில்லை. நாம் அறிவித்த யுத்த நிறுத்தத்தை இந்த நிமிடமும் நேர்மையுடன் மனப்பூர்வமாகக் கடைப்பிடித்துக்கொண்டே இருக்கிறோம்."

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் கோப்பாயில் இடம்பெற்ற கப்டன் அமலனின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. தேவர், திரு. ஆஞ்சநேயர், செல்வி மாலினி, திரு. ... உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## கிழக்கு மக்களின் வேதனைகள் சொல்லி முடிக்க இயலாதவை

### யாழ் வந்த மாணவர்கள் உதயனுக்கு தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 7

கிழக்குப்பகுதி மக்கள் — குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கடந்த ஆறு மாதகாலமாகப் பட்ட வேதனைகள், அவலங்கள் சொல்லி முடிக்க முடியாதவை. எத்தனை கஷ்டங்கள், எத்தனை கொடுமைகள்.

மட்டக்களப்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மாணவர்கள் அங்கு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், துயரங்கள் குறித்து பெரும் விரக்தியுடன் உதயனுக்குப் பல்வேறு தகவல்களைத் தெரிவித்தனர்.

அப்பாவித் தமிழர்கள் கண்டபடி இழுத்து எரிக்கப்பட்டது. பெண்கள் செசல் ஷெல்லாக் கொடுமைக்கு இலக்கானது; தமிழ் இளைஞர்கள், யுவதிகள், பெரியவர்கள் என்று வயது வித்தியாசமின்றி பெரும் எண்ணிக்கையானோர் கடப்பட்டும், தாக்குதல்களுக்கு இலக்காகியும் சித்திரவதைக்குட்பட்டும் மரணமானது; இவை

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் மரக்கறி விதைகள், இளம் கன்றுகள் பல ரகங்களிலும் விற்பனைக்கு உண்டு. வீட்டுத் தோட்டங்களுக்கு மிகவும் உபயோகமானது. மங்கள ஏஜென்சி, செம்மியாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(15388)

Typewriters தமிழ், ஆங்கிலம், Standard - Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு: மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். Fudo, 39/17, மின்சார நிலையவீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(C/5613)

### வேப்பெண்ணை

வேம்பு தரும் [சுவாழ்வுக் காலசாதனம் வேப்பெண்ணெய் ஒரு பீப்பா, பூச்சிகளை விரட்டி, பயிர்களுக்கும் பாவிக்கலாம் போத்தல் ரூபா 80.00 மட்டுமே. இணுவில், திருநெல்வேலி, யாழ் நகர் நவீன சந்தை அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற் - யாழ்ப்பாணம்.
(C/5611)

### புத்தகங்கள்

1991ல் நடைபெறவுள்ள O/L விசேட பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக 1990 டிசம்பரில் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகை விற்பனையாகிறது. தொலைகயாகவிருப்போர்க்கு விலைக்கழிவு உண்டு விபரம் கட்கு எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலைச்சந்தி.
(15396)

### நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இனவிதை எலுமிச்சை, ஒட்டுத்தோடை, ஒட்டு எலுமிச்சை மா, லா நாற்றுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி/5584)

### FUDO - TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணக் கிளை; பிரதான வீதி, மானிப்பாய்.
(சி-5585)

### தேவை

தேனீர் தயாரிப்பதில் திறமை உடையவரும், இடியப்பம் தயாரிப்பதிலும், குசினி வேலைகளிலும், நல்ல அனுபவம் உள்ளவர்களும் தேரில் வரவும். ஹோட்டல் றொலக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(15358)

### மணமக்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 33 வயது எக்கவுண்டனுக்கும், குற்றமுள்ள 25 வயது மணப்பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி செம்மியாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(15387)

### VACANCY

Applications are invited for the post of "English Typist" (Female) with the knowledge of Accounts. Apply on or before 15 - 01 - 1991 K. A. Engineer's, 142, Palaly Road, Thirunelvely, Jaffna.
(15892)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக). தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை.
(15386)

## தமிழ்ழ ஆய்வு நிறுவனத்தின் சஞ்சிகை

யாழ்ப்பாணம், ஜன. 7

தமிழீழ ஆய்வு நிறுவனம் 'ஆதாரம்' என்னும் சமூக பொருளாதார, விஞ்ஞான ஆய்வு சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நவம்பர் - டிசம்பர் மாத முதலாவது இதழ் தற்போது வெளிவந்துள்ளது.

தமிழீழ கிராமங்கள் தோறும் ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தியுள்ள கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக இந்த சஞ்சிகை விநியோகம் இடம்பெறும். (இ-5)

## JAM போத்தல்கள் தேவை

சுத்தமான Jam போத்தல் ஒன்று ரூபா 3/- வீதம் கொள்வனவு செய்யப்படும்.

வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை பின்வரும் முகவரியில் கொடுக்கலாம்.

**TASTELINE INDUSTRIES (Pvt) Ltd**
No. 14, சினியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(15389)

## பரி. பேதுரு பாலர் பாடசாலை
## கில்னர் மண்டபம்

பாலர் பாடசாலையும், பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நெறியும்

தைமாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கில்னர் மண்டபம்,
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(15399)

## 11-ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நடராசா பாலசுப்பிரமணியம்

(இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளரும், சட்டத்தரணியும்)

தோற்றம் : 1939 - 08 - 19
மறைவு : 1980 - 01 - 09

தொழிற்சங்கவாதியும், சமூக சேவகருமான திரு. நடராசா பாலசுப்பிரமணியத்தின் பதினோராவது சிரார்த்த தினமான இன்று அஞ்சலி செலுத்துகின்றோம்.

பிள்ளைகளும், உறவினரும்

"ராஜமனை",
வேலணை மேற்கு வேலணை 6.
[15311]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 — 01 — 1936
உதிர்வு 07 — 01 — 1987

### திருமதி பரமேஸ்வரி அருளானந்தம்

(முன்னாள் ஆசிரியை, அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

ஆண்டுகள் நான்காகியும்
ஆறாது துயரம்மா - உம்மைப்
பிரிந்த நாள் முதலாய் துயரில்
வேகாது வேகின்றேன்
அன்புச் சுடரானாய்! அணையாத தீபமானாய்!
என்புருகி நினைக்கின்றேன், எழுந்து நீ வாராயோ ?

என்றும் நீங்காத நினைவாக:
எஸ். அருளானந்தம்,

அச்செழு.
[15370]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 . 02 . 1948
மறைவு: 19 12 1989
திதி: 07 . 01 . 1991

அமரர்

### நடராஜா சந்திரராஜா (ரோஸ்)

(குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - தலவாக்கொல்லை)

எங்கள் அன்பின் அப்பாவே! அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய், கொடை வள்ளலாய், வாழ்க்கையில் கலகலப்பாக வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே - நீங்கள் மறைந்து இரண்டாண்டு சென்றாலும் உங்களின் நீங்காத நினைவுகள் நிழல்களாகி எம்முன் நிற்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தினம் தினம் உங்கள் நினைவால் வாடும்;
திருமதி S சந்திரராஜா,
பிள்ளைகள்: டினேஷ், சிவநுயா, நிஷாந்த்,
உறவினர்கள்.

பலாலி வீதி,
கோண்டாவில்.
(15366)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் ஜனனம்: 1934 — 09 — 28
விண்ணில் அஸ்தமனம்: 1990 — 12 — 08

### திரு. செல்லையா செல்வரெட்ணம்

"வாழ்வின் வழிகாட்டியாய் நீங்கள் - அப்பா விண்ணிலும் எங்களை வழிகாட்டி நடத்தவும்" அன்னாரின் ஆத்மசாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்.

குமாரவடி, ஆனைக்கோட்டை.
[14914]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னத்தம்பி வேதநாயகம்

துன்னையம்பதி

மலர்வு: 1905 - 08 - 11
உதிர்வு: 1990 - 01 - 07

திதி: 1991 - 01 - 07

திருமுறைகள் பலவறிந்து சிறப்புடன் வாழச் செய்வங்கள் பல ஈந்த எம் அன்னையே! தினமும் நாம் உமது திருவடி பணிந்து உங்கள் நினைவாலும், ஒலியாலும் உள்ளம் உருகுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

"மணிமஹால்"
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
— குடும்பத்தினர்.
(15383)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

### கலை, வர்த்தக வகுப்புக்கள்

### DAY CLASSES

**பொருளியல்:- க. கலாகரன்**
90 Aug.- வினாவிடை வகுப்பு - பகுதி II - 10 மணி
91 Aug.- வங்கியியல் / நேரிய வருமானம்- 9 மணி

**கணக்கியல்:- S. K. பிரபாகரன்**
90 Aug.- கம்பனி முடிவுக் கணக்குகள் - 11 மணி
91 Aug.- செம்மையாக்கங்கள் - 10 மணி

**வர்த்தகம்:- பிரபல ஆசிரியர்**
90 Aug.- வினாவிடை பகுதி II - 12 மணி

அனைத்து பாடங்களும் வழமையான ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றன.

கு. குறிப்பு:- 1. கிழமை நாட்களில் நான்கு பாடமும் நடைபெறும்.
2. விடுதிவசதி செய்துகொடுக்கப்படும்.

[சி-5614]

## ஒஸ்லோ கல்வி நிலையம்

(கச்சேரி நல்லூர் வீதி)

### ★ ஆண்டு 5, 6, 7, 8, 9, 10, 11 வகுப்புகள்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — BABU (மகேந்திரம்) |
| கணிதம் | — ஜெயகுமார் |
| தமிழ் | — மௌலீசன் |
| ஆங்கிலம் | — ஆசிர்வாதம் |
| சமூகக்கல்வி | — முருகையா |
| வர்த்தகம் | — மோகன் |

### ★ A/L 90

(வர்த்தகம், கலை) வகுப்புகள்

ஆரம்பம்: 09-01-1991

(பிற்பகல் 3.30 மணி)

[15206]

## 29ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. ஆறுமுகம் குணரத்தினம்

LL.B., Attorney - at - law
[பதில் உதவிப் பதிவாளர் / யாழ். பல்கலைக்கழகம்]

தோற்றம் : 18 - 3 - 1948
மறைவு : 10 - 12 - 1990

அடுக்கான பேச்சும் மிடுக்கான போக்கும்
நட்பொடு கருணை பொழியும் முகமும்
நாம் யார்க்கும் குடியல்ல
என்ற உன் கொள்கைப் பற்றும்
கல்வியில் கொண்ட நாட்டமும்
கடமையில் காட்டும் பற்றும்
எட்டி நின்று புறங்கள் கூறும்
எதிரியை சாடும் வீரமும்
மிளிரும் உன் திருவுருவம்
மண்ணில் மறைந்ததன்றோ
மறக்கமுடியுமோ வாழ்வில் உன்னை
தந்தோம் நெஞ்சார அஞ்சலிகள்.

நண்பர்கள்
(பாதுகாப்புத் திணைக்களம்)
யாழ். பல்கலைக்கழகம்
[15380]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தெளிந்த சிந்தை வேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பும், அரசாங்கத்தின் தாக்குதல் நிறுத்த அறிவிப்பும் அமுலாகியுள்ள காலம் இது.

இதற்கிடையில் புலிகள் வழங்கிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களைத் தொடங்குவதற்கு அரசுக்கு விருப்பம் இருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்று அமைச்சர் தொண்டமான், சிறிலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா போன்றவர்கள் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற 'எதிர்க்கும்' கட்சிகள், புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே அரசு பேச்சுவார்த்தைக்கு இணங்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளன.

இதேவேளை, யுத்த நிறுத்தம் ஆனாலும் சரி, பேச்சுவார்த்தையானாலும் சரி முன்நிபந்தனையுடன் நடக்க வேண்டும். தாம் நினைத்த நேரத்தில் யுத்தத்தைப் பிரகடனம் செய்யவும், பின்னர் யுத்தத்தை நிறுத்தவும் முடியும்; தமது வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப அரசாங்கமும் தலைகொடுக்க வேண்டும்; என்று விடுதலைப் புலிகள் எண்ணுவதற்கு இடமளிக்கக் கூடாது. ஒரு இலங்கை, ஆயுதங்களைக் கீழே வைத்தல் ஆகியன பிரதான நிபந்தனைகளாக அமைய வேண்டும் - இவ்வாறெல்லாம் கொழும்புப் பத்திரிகைகள் பிரேமதாசாவுக்குப் புத்தி சொல்கின்றன.

இத்தகைய ஓர் அரசியல் ஆலோசனைக் குழப்பத்திலிருந்து அரசாங்கம் விடுபடுவதற்கு, ஒரு தெளிவான நிலையை அடைவதற்கு, அது தனது சொந்தப் புத்தியில் எப்படிக் கால் வைத்து நிற்கப் போகின்றது என்பதே இப்போதைய பெரும் சிக்கல். அரசாங்கம் தெளிந்த சிந்தையுடன் செயற்படுமா அல்லது சொல்வார் புத்தி கேட்டு மீண்டும் தமிழ்ப் பகுதிகளை பலிக்களம் ஆக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

போராட்டம் நடத்துபவர்கள் உரிமைகள், கோரிக்கைகளை முன் வைத்தே அதில் ஈடுபடுகிறார்கள். அரசாங்கம் அவற்றைத் தருவதற்குச் சம்மதமாக உள்ளதா என்பதைக் கேட்டுத்தான் அவர்கள் பேச்சுவார்த்தைக்குப் போக வேண்டும். ஆகக் குறைந்தது என்னென்ன முக்கிய அம்சங்களை அடிப்படையாக வைத்துப் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என்று அவர்கள் நிபந்தனைகள் விதிப்பது இயல்பு. பேச்சுவார்த்தை வரன்முறைக்கு உட்பட்டது.

இதனைப் புரிந்து கொள்ளாமல், அரசாங்கமே நிபந்தனைகளை விதித்தால் அது [பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய] பேச்சுவார்த்தைக்கான இலக்கணத்துக்குப் புறம்பானதாகும். விட்டுக்கொடுப்பதும், ஏற்றுக்கொள்வதும் பேச்சுவார்த்தை நடக்கும் போது மூகிழ்க்க வேண்டியவை; அதற்கு முன்னரல்ல.

இதனை அரசாங்கமும், அதற்கு ஆலோசனை வழங்குவோரும் புரிந்து கொள்ளாவிடில், நாட்டின் மிக முக்கிய பிரச்சினைக்கு, மற்றும் இலக்கப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழி தெரியாது தொடர்ந்து இருளே மண்டும்!

# பயணிகள் படகில் பொருள்கள் ஏற்றக்கூடாதென கெடுபிடி

நெடுந்தீவு, ஜன. 7

நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடும் பயணிகள் படகுகளில் வியாபார நோக்குடன் பொருள்களை எடுத்து வருவதற்கு கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

பயணிகளுடன் பொருள்களும் ஏற்றப்படுவதால் சோதனையின் போது சிரமங்கள் ஏற்படுகின்றன என்று கடற்படையினர் தெரிவிக்கின்றனராம்.

கடற்படையினரின் இந்த கெடுபிடி காரணமாக கருவாடு, தேங்காய் போன்ற பொருள்கள், பயணிகள் படகுச் சேவை நடைபெறும் நாட்களில் தனிப் படகு ஒன்றில் குறிகாட்டுவானுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-111)

## மாணவர் சீருடைத் துணிக்கு பெற்றோர் அலைச்சல்

அச்சுவேலி, ஜன 7

பாடசாலை மாணவர் சீருடைகளுக்கான துணி வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

சீருடைகளுக்குத் தேவையான வெள்ளைப் பொப்லியஸ்ரர், வெள்ளைப் பொப்லின், நீலக் காற்சட்டைக்கான துணி ஆகியவற்றை வாங்குவதற்கு பெற்றோர் கடை கடையாக அலைகின்றனர்.

இவற்றை வைத்திருக்கும் வர்த்தகர்களும் குதிரை விலை சொல்கிறார்கள் என்று புகார் கூறப்படுகிறது. [இ-11]

## சூரிய கிரகணம்

இம்மாதம் 16 ஆம் திகதி சூரிய கிரகணம் இடம்பெற இருக்கிறது.

பூமியின் பெரும் பகுதியை இருளில் மூழ்க வைக்கும் சூரிய கிரகணம் இது என்று வானியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதுபோன்றதொரு சூரிய கிரகணம் 1976 ஆம் ஆண்டில் ஏற்பட்டது.

நியூசிலாந்து நாட்டில் இக் கிரகணம் நன்கு தெரியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், வானியல் விஞ்ஞானிகள் இதனை அவதானிக்க அங்கு படையெடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## பெருங்குளம் மட்டுவில் வீதி

சாவகச்சேரி, ஜன 7

நீண்ட காலமாக செப்பனிடப்படாது இருந்த மட்டுவில் - பெருங்குளம் வீதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் சிற்றூர் அவையால் செப்பனிடப்பட்டு வருகிறது. [இ-3]

## முறிவு - நெரிவு கிளினிக் முழுமையாக இயங்காத நிலை

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். போதனா வைத்தியசாலை முறிவு நெரிவு கிளினிக் பகுதி திருத்த வேலைகள் முழுதாக முடிவடைந்தும் அவசியமான பல கருவிகள் இல்லாத காரணத்தால் அது முழுமையாக இயங்க முடியாத நிலையில் உள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது இக் கருவிகள் திருட்டுப் போயிருந்தன.

அவசியமான கருவிகளை பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு மேலிடத்துடன் பல தடவைகள் தொடர்பு கொண்டும், இன்னும் இக் கருவிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அவசர நோயாளிகளுக்கு முறிவு நெரிவுக் கிளினிக்குகள் தற்போது சத்திர சிகிச்சைக் கிளினிக்கில் நடத்தப்படுகின்றன. (இ-15)

## வவுனியா விவசாயக் கல்லூரி

வவுனியாவில் உள்ள விவசாயக் கல்லூரி கிளிநொச்சிக்கு தற்காலிகமாக இடம் மாற்றப்படவுள்ளது.

இது தொடர்பாக பிரஸ்தாப விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் நடைபெற இருக்கிறது. வவுனியா விவசாயக் கல்லூரி அதிபர் திரு. சு. இராசதுரை இத்தகவலைத் தெரிவித்தார். (இ)

## சல்வீனியாவுக்கு எதிரான போராட்டம் தொடர்கிறது

யாழ். மாநகர சபையால் ஆரியகுளத்திலிருந்து "சல்வீனியா" தாவரத்தை அகற்றும் வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

முன்னர் 10 தொழிலாளர்கள் வரையில் ஈடுபட்டிருந்த இந்த வேலையில் தற்போது 30க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

குளம்பின் பெருக்கெடுமான சல்வீனியாவை அழிப்பதன் மூலம் மலேரியா, யானைக்கால் போன்ற நோய்கள் பரவுவதைக் குறைக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## அமைச்சர் ரஞ்சனின் சூறாவளி சுற்று!

கொழும்பு, ஜன. 7

காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் குறித்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிவிப்பு கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி நண்பகல் 11 மணிக்கு ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கிடைத்தது. அந்த அறிவிப்பு கிடைத்த கையோடு - பிற்பகல் 2.30 மணிக்கு - பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா, இராணுவத் தளபதியுடன் வடக்கு, கிழக்கிற்கு பறந்து சென்றார்.

அவசர அவசரமாக வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மணல் ஆறு [வெலி ஓயா], அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் சென்ற அமைச்சர் அங்கு, சிறிது சிறிது நேரம் தங்கி பிராந்திய தளபதிகளுடன் உயர்மட்ட ஆலோசனைகளை நடத்திவிட்டு கொழும்பு திரும்பினார்.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா வேறொரு வியாழனன்று அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளை ஜனாதிபதி சந்தித்துப் பேசிய கூட்டத்தில் வைத்து வெளியிட்டார். (உ-3)

## தரையிலும்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதன்பின் சண்டை விமானங்களை கைவிட்டு - எமது போர் நடவடிக்கை களைப் புதுவிதமாக மாற்றி - இரா[illegible]

## கொடி தினம்

பலாலி ஆசிரிய கலாசாலை இந்து மாமன்றம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை தைப்பூச தினத்தன்று யாழ். குடாநாடு, கிளிநொச்சி உட்பட்ட பகுதிகளில் "கொடி தினம்" நடத்தத் தீர்மானித்துள்ளது.

யாழ். திருநெல்வேலி சைவச்சிறார் இல்ல நிதிக்காக இக்கொடித்தினம் நடத்தப்பட உள்ளது. [இ-30]

## வளைகுடா போர் விளைவை எதிர்நோக்க இலங்கை தயார்

கொழும்பு, ஜன. 7

வளைகுடாவில் போர் ஒன்று ஏற்படுமிடத்து, அதனால் ஏற்படும் தாக்கங்களைச் சமாளிக்கும் அவசரத் திட்டம் ஒன்றை தயாரிப்பது குறித்து கொழும்பு அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகின்றது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்பின் பேரில் வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் கடந்த சனிக்கிழமை மாநாடு ஒன்றை நடத்தினார்.

ஏற்றுமதியாளர்கள் உட்பட பல உயரதிகாரிகள் அம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

போரின்போது சூயஸ்கால்வாய் தொடர்ந்து திறந்து இருப்பின் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி நடவடிக்கைகள் பாதிக்கப்படமாட்டா என்று ஏற்றுமதியாளர்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

தேயிலை விற்பனை தொடர்ந்து ஐந்து வாரங்களுக்கு கொழும்பில் நடைபெற முடியாத நிலை ஏற்படின் உற்பத்தியான தேயிலையை களஞ்சியப்படுத்தும் வசதிகளை உருவாக்க வேண்டிய நெருக்கடி ஏற்படும் என்றும்-

போதுமான அளவு களஞ்சிய வசதிகளை கண்டுபிடிப்பதில் கஷ்டங்கள் ஏற்படும் என்றும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## செயற்கை முறை சினைப்படுத்தும் சேவை மீண்டும்

யாழ்ப்பாணம், ஜன. 7

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் தடைப்பட்டிருந்த செயற்கை முறைச் சினைப்படுத்தும் வேலைகள் மீண்டும் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ளன என்று திருநெல்வேலியில் உள்ள பிராந்திய செயற்கை முறை சினைப்படுத்தும் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தச் சேவை பின்னர் படிப்படியாக ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இந்த நிலையம் இயங்காததால் கடந்த காலங்களில் கால்நடை உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது. (இ-எ)

## வில்வம் கன்றுகள்

யாழ்ப்பாணம், ஜன. 7

திருக்கோவில்களுக்கான வில்வம் கன்றுகளை மில்க்வைற் ஸ்தாபனம் இலவசமாக வழங்கி வருகிறது. [இ]

## கலையரங்கு

நவாலி, ஜன. 7

மறைந்த கலைஞர் திரு. எஸ். அருளநாயகத்தின் ஞாபகார்த்தமாக நவாலி இளம் கலைஞர்மன்றம் கலையரங்கு ஒன்றை நிறுவுவதற்கு முடிவு செய்துள்ளது. (இ-100)

## அதிபர்தர பதவி உயர்வுகள்

பருத்தித்துறை ஜன. 7

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே அதிபர் தரங்களில் உள்ளவர்களுக்கான பதவி உயர்வுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

அதிபர் தரம் மூன்றில் இருப்பவர்கள் அதிபர் தரம் இரண்டிற்கும், அதிபர் தரம் இரண்டில் இருப்பவர்கள் அதிபர் தரம் ஒன்றுக்கும் பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இவர்களின் சுயவிவரக் கோவைகள் கல்விக் கோட்டங்களில் இருப்பதனால் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் இந்த மாதப் பிற்பகுதியில் நடைபெறும் என திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார். [இ-118]

## மரத்தால் விழுந்து காயம்

ஆட்டுக்கு குழை வெட்ட மரத்தில் ஏறிய முதியவர் ஒருவர் கீழே விழுந்து காயம் அடைந்தார்.

நெடுந்தீவைச் சேர்ந்த இ. சபாபதிப்பிள்ளை [வயது 65] என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். [இ-111]

## சேவாச்சிரமத்தில் இளைஞர் தின விழா

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் இன்று திங்கட்கிழமையாகும். அதனை ஒட்டி பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை தேசிய இளைஞர் தினம் நடைபெறவுள்ளது.

அன்று காலை 8.30மணிக்கு பஜனையுடன் ஆரம்பமாகும் தேசிய இளைஞர் தினவிழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா, யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு க. நாகேஸ்வரன் சுவாமி சித்ருபானந்தா ஆகியோர் விவேகானந்தரும் இளைஞர்களும், விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள் என்பன குறித்து உரையாற்றுவர்.

இவ்விழாவில் யாழ்ப்பாணத்தின் பல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். அவர்கள் மத்தியில் விவேகானந்தரின் வழிகாட்டுதல்கள் குறித்து கருத்தரங்கும், கலந்துரையாடலும் இடம்பெறும். (அ)

# உலகச் செய்திகள்

## எண்ணெய் விலை வீழ்ச்சி

லண்டன், ஜன. 7

அமெரிக்க - ஈராக் நேரடிப் பேச்சுக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சி அடைந்தது.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 23 டொலராகக் குறைந்தது.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த பின்னர் எண்ணெயின் விலை இந்த அளவுக்கு வீழ்ச்சி அடையவில்லை என்று கூறப்படுகிறது. (இ-எ)

## பிரிட்டன் தயார் நிலையில்

லண்டன், ஜன. 7

வளைகுடா போர் ஏற்படுமிடத்து, காயமடையும் படை வீரர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க பிரிட்டனில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளில் மேலதிகப் படுக்கை வசதிகள் அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்படுகின்றன என்று பிரதமர் ஜோன் மேஜர் சொன்னார். [இ-எ]

## பேச்சு நடக்கும் இடம் இரகசியம்

ஜெனிவா, ஜன. 7

அமெரிக்க - ஈராக் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுக்கள் ஜெனிவாவில் எங்கே இடம் பெறும் என்பது இரகசியமாக வைக்கப்பட்டு உள்ளது.

இப்பேச்சுக்கள் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளன என்பது தெரிந்ததே! (இ-எ)

## கருணாநிதி பதவி விலக கோரிக்கை

சென்னை, ஜன. 7

முதலமைச்சர் மு. கருணாநிதி கௌரவமான முறையில் பதவியில் இருந்து விலகிவிட வேண்டும்.

தமிழ்நாடு ஜனதா தள் சோசலிஸ்ட் கட்சித் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான திரு. பொன். விஜயராகவன் முன்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

திரு. கருணாநிதி தானாக பதவி விலகாவிடில் அதற்கான விளைவை அவரும் அவரது அரசும் எதிர் நோக்க வேண்டி நேரிடும் என்றும் திரு. விஜயராகவன் எச்சரித்தார். (இ-எ)

## குயிலர் - புஷ் சந்திப்பு

வாஷிங்டன், ஜன. 7

ஐ.நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை, அவரது காம்ப்டேவிட் விடுமுறை வாசஸ்தலத்தில் சந்தித்து வளைகுடா நெருக்கடி பற்றிப் பேசினார்.

ஜனவரி 15 காலக்கெடுவுக்கு முன்னர் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் இன்னொரு கூட்டத்தை அழைத்து குவைத் பற்றி பேசுவதில் பிரயோசனமில்லை என்று அதிபர் புஷ், ஐ.நா. பொதுச் செயலாளரிடம் எடுத்துக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

